ஓம் தத் ஸத்.

ஏகமேவாத்விதீயம்.

# தத்துவபோதினி.

பு. ௩.] சென்னைப்பட்டணம் ௧௮௯௭௵ பிப்ரவரிமீ ௧௫வ. [இல. ௧௰.

ஏகமேவாத்விதீயம், ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம, ஶாந்திஶிவமத்வைதம், தமேகம்
பரமாத்மாநம் ... ப்ரதிஷ்டிதம் ...,
தஸ்யைகஸ்யைவோபாஸநயா.

ஸத்யமேவஜயதே நாந்ருதம்.

## விஷய அட்டவணை.


| | | பக்கம். |
|---|---|---|
| ௧. | கடவுள்துதி | ௧௭௫ |
| ௨. | விளம்பரங்கள் | ௧௭௬ |
| ௩. | விக்கியாபனம் | ௧௭௭ |
| ௪. | மதநூல் | ௧௭௮ |
| ௫. | பிராம்மதருமம் | ௧௭௯ |
| ௬. | உபநிஷத்து | ௧௮௦ |
| ௭. | உபந்நியாஸம் | ௧௮௧ |
| | நிருபங்கள். | |
| ௮. | கூடலூர்பிராந்தியத்தில் பரப்ரம்ம ஸஜனை ஆரம்பம் | ௧௮௪ |
| ௯. | பெங்களூர், வேதசமாஜம் | ௧௮௮ |
| ௧௦. | இதிஹாஸகல்பனை | ௧௮௯ |
| ௧௧. | கீர்த்தனை | ௧௯௦ |


**சத்தியமே சக்தி—தத்துவமே சித்தி.**

### கடவுள்துதி.

இராகம் - கல்லியாணி - ரூபகதாளம்.

பல்லவி.

மனதேயுனக்கேனினிப்பயம் - மயக்கம்நீங்கிஎழுச்சியுறுப்

அநுபல்லவி.

கனமேவியபுருஷனுயிரம்,
கண்ணுஞ்செவியுங்கரமுஞ்சரணமும்,
நினைவிற்கெட்டாசிரசும்வகித்துனை,
நேசித்துக்காக்கத்வஜங்கொண்டிருக்கையில்...... (மனதே.)

சரணங்கள்.

௧. எங்குமுசத்தோடெவ்வுலகத்தினும்,
எள்ளினுள்ளெண்ணெய்போல்தங்கியே,
அங்கங்களுள்ளவுமில்லவுமேனைய,
ஆகியபூதங்கள்தாங்கியே,
பொங்கும்பெருங்கொண்டல்போலதயாரசம்,
பொழிந்துகாக்கின்றபேரருள்வள்ளலாய்,
சங்கிலையிலாச்சகமெலாந்தன்னில்லெனச்,
சந்தோஷமாய்குடிகொண்டுவசிக்கையில்...... ...(மனதே)

௨. அன்னத்தாலானவும்ஆகப்போகின்றவும்,
ஆகியபிராணனனைத்தினிற்கும்,
மின்னற்போலுண்டாய்மறையுமவற்றிற்கும்,
மிருத்தியுபயமற்றவெப்பொருட்கும்,
மன்னும்பிரபஞ்சத்திலுள்ளமற்றெவ்வகை,
மாண்புறுசிருஷ்டிமுழுவதற்கும்நலம்,
உன்னியுகந்துபடியளக்கும்பர,
மேஶ்வரனாயநம்மப்பனிருக்கையில்............(மனதே.)

௩. எத்தேவனாக்கினையாலாயதோஇந்த,
ஈரைந்துமொன்றாயதத்துவங்கள்,
எத்தேவனாக்கினையாலாயதோவதற்,
கேற்றவாகாயாதிபூதங்களும்,
எத்தேவனாக்கினையாலாயதோகாணும்,
எல்லாசராசரமானபொருள்களும்,
அத்தேவனேநம்இருதயத்திருக்கையில்,
அண்டிஅவன் சரண்கொண்டுசுகிக்கலாம்........(மனதே.)

## விளம்பரம்.

இந்தச் சென்னைத் தத்துவபோதினியை வாங்க மனமுடையவர்கள் மயிலாப்பூரில் தத்துவபோதினி அச்சுக்கூடத்தில் வேதஸமாஜத்தின் காரியதர்சியாகிய-பா. சுப்பராயலு செட்டியார், பி. ஏ. பி. எல். அவர்களுக்கு எழுத்துமூலமாய்த் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

## இதற்குச் சந்தாவிவரம்.

சென்னைப்பட்டணத்தி லுள்ளவர்கள் வருஷம் ஒன்றுக்கு ரூபாய்......................௧ - அ - 0

அதற்கு வெளியிலுள்ளவர் தபால் கூலியுடன் சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய். ௨ - 0 - 0

பத்துப்பிரதிகளுக்கு அதிகமாய் வாங்கும் வெளியிலுள்ளவர்கள் தபால்கூலியுடன்சே

ர்த்து வருஷம் ஒன்றுக்கு
ரூபாய்.................க - கஉ - 0

இதற்குச் சந்தாதார்கள்தங்கள்சந்தாக்களை யந்தந்த வருஷத்தில் முன்பணமாய்க் கட்டவேண்டியது. மேமாசத்துக்கு மேமாசம் இதற்கு வருஷமாய்க்கொள்ளவேண்டியது. வருஷம் நடுவில் வாங்கத் தொடங்குவோர்க்குச சந்தாவீதம் - அ- அணு உயர்த்தப்படும்.

வெளியிலிருநதுசந்தா அனுப்பவேண்டியவர்கள் தபால் முத்திரைகளனுப்பலாம். ஆனல், அப்படி யனுப்பப்படும் முத்திரைகளை மாற்றுவதர்க்காக,ரூபாய் ஒன்றுக்கு - ஒரு அணு வீதம்-வட்டம்சேர்த்து அனுப்பவேண்டியது.

இந்தப் பத்திரிகையின் சந்தாதாரர்களும், பங்குக்காரர்களும், இடம் மாறும்போது அந்தவிவரத்தைத் தயைசெய்து காரியதர்சிக்குத் தெரிவிக்கவேண்டியது.

## புஸ்தகவிளம்பரம்.

கிரந்த்திலும், தமிழிலும் இயற்றப்பட்டபாலவியாகரணம். 0 - சு - 0
தபால்கூலி............ 0 - க - 0

தெலுங்குபாலவியாகரணம்... 0 - சு - 0
தபால்கூலி............ 0 - க - 0

வேதஸமாஜத்தார் முதல் விண்ணப்பம் அர்ச்சையைக்குறித்து நன்றாய் பயிண்டுசெய்தது..................... 0 - அ - 0
தபால்கூலி........... 0 - உ - 0

ஷை மட்டபயிண்டுள்ளது..... 0 - எ - 0
தபால்கூலி........... 0 - உ - 0

வேத சமாஜத்தார் இரண்டாவது விண்ணப்பம் பெண்கள் கல்வியைக்குறித்தது........ 0 - அ - 0
தபால்கூலி........... 0 - உ - 0

தெலுங்கில்ஸ்தோத்திரபாடம். 0 - க - 0

தபால்கூலி........... 0 - க - 0

கஅகூரு௵ மேமாசம் முதல் கஅகூசு௵ ஏப்பிரல்மீ வரையிலுள்ள தத்துவபோதினி பயிண்டுசெய்தது. ...... ங - 0 - 0
தபால்கூலி........... 0 - ச - 0

வசனக்கலம்பகம்ஒன்றுக்கு... 0 - ரு - 0
தபால்கூலி........... 0 - க - 0

வெளியிலுள்ளவர்கள் புஸ்தகம் ஒவ்வொன்றுக்கும் குறித்த தபால்கூலி சேர்த்தனுப்பவேண்டியது.

இந்தபுத்தகங்களை பெங்குளூர் கண்டோன்மெண்டில் - ஷாப்பு - மதுரைமுத்துப்பிள்ளை யவர்களிடத்திலும் வாங்கிக் கொள்ளலாம்.

## விளம்பரம்.

### தெலுங்கு தத்துவபோதினி.

இஃது சென்றநவம்பர்முதல் பிரசுரஞ்செய்யப்பட்டு வருகின்றது. நவம்பர்முதல்மேமீ வரையில்அரைவருஷசந்தா. 0 - கஉ - 0
தபால்கூலி............ 0 - கூ - 0

## விக்கியாபனம்.

சோதரர்களே !

கடந்ததடவையே யெழுதவுத்தேசித்த விஷயங்களில் குறைவுபட்டவற்றை அப்பொழுது சம்பவித்ததடங்கலால் பூர்த்திசெய்யக்கூடாமல் இந்தவிசை முடிக்கிறதாகக் குறித்திருந்தோமல்லவா? ஈசுவரோத்தேசியமென்னமோ அதனை யவ்வாறு நிறைவேற்றக்கூடாதஅநிவாரியஅசந்தர்ப்பம்நேரிட்டபடியினலே(கருணாநிதியாகியநமதப்பன் அருட்புரிவாராகில்) வருகிறபத்திரிகைதொடங்கி கூடியவரையில் குறைவின்றி கடமையைச் செலுத்த முயல்கிறோம்.

### குறிப்பு.

தர்மஸபையார் கேள்விகட்கும் வருகிற விசையே விடைகிடைக்கும்.

## மநுநூல்.

### ௩ம் - அத்தியாயம் (தொடர்ச்சி.)

(௫௧.) கன்னிகையின் கற்றுணர்ந்தபிதாவானவன் சுல்கத்தை (விக்கிரயஞ்செய்தபணத்தை) அணு அளவும் ஒருபொழுதும்வாங்கத்தக்கவனல்ல; (அவ்விஷயத்தில்) பேருசையால் (அவன் சுல்கத்தை) வாங்குவானகில் அபத்தியவிக்கிரயி (கன்னிகையைவிற்போன்) என அழைக்கப்படுவான்.

(௫௨.) ஸ்திரீதனம் (கன்னிகையைவித்ததனம் அல்லது அவளுக்கு வெகுமதியாககொடுத்ததனம்) அவளிடவாஹனம் வஸ்திர முதலியவற்றை அனுபவிக்கும்எவ்வகைபந்துக்களாயினும் அவர்கள் அதோகதியை (நரகத்தை) அடைகின்றார்கள்.

(௫௩.) ஆர்ஷவிவாகத்தில் சிலர்கோமிதுனம் (பசுவின் இணைகள்) சுல்கமெனை (வரனிடத்தினின்றும் கிரகித்துக்கொள்ளத்தக்கதென்) பார்கள்; அதுவும் அபத்தமே; சுல்கமானது அல்பமாகிலும் மகத்தாகிலும் அதுவிக்கிரயந்தான்.

(௫௪.) எப்பொழுது கன்னிகையைப்பற்றி கொடுக்கப்பட்டசுல்கத்தை (தனம்மற்ற ஆடைஆபரணம் முதலியவற்றை) பந்துக்கள் எடுத்துக்கொள்ளவில்லையோ அக்கன்னிகையைப்பற்றி கொடுக்கும்வெகுமதியானது குற்றமற்றதும் (ஸந்தோஷத்தால் கொடுக்கும், வெகுமதியாகின்றது.

(௫௫.) அதிகஸம்பத்தைவிரும்புகின்ற பிராதுருபிதிருபர்த்தா முதலியவர்களால் ஸ்திரீகள் ஆடையாபரணங்களைக்கொண்டு அலங்கரிக்கதக்கவர்களும் பூஜிக்கத்தக்கவர்களும் ஆவார்கள்.

(௫௬.) எவ்விடத்தில் (எந்தகுலத்தில்) ஸ்திரீகள்பூஜிக்கப்படுகிறார்களோ அவ்விடத்தில்தேவர்கள் எல்லாம் பிரஸன்னமாக இருக்கிராாகள், எவ்விடத்தில் இவர்கள் பூஜிக்கப்படவில்லையோ அவ்விடத்தில் (அக்குலத்தில்செய்யப்படும்) ஸகலமான (யக்கியமுதலிய) கிரியைகளும் நிஷ்பலமாகிவிடுகிறதுகள்.

(௫௭.) எக்குலத்தில் ஸ்திரீகள் வியசனப்படுகிறார்களோ அக்குலம்நாசமடைகின்றது; எக்குலத்தில்ஸ்திரீகள் வியஸனப்படவில்லையோ அக்குலம்எப்பொழுதும் விருத்தியடைகின்றது.

(௫௮.) (சோதரிகள், பெண்கள், பெண்ஜாதிகள், நாட்டுப்பெண்கள்முதலிய) ஸ்திரீகள் (புருஷரால்) பூஜிக்கப்படாமல் எக்குலத்தைசபிக்கிறார்களோ அக்குலம் பிசாசினால் நாசம் பெற்றதுபோல் முழுதும் அடியுடன் நாசமாகிவிடும்.

(௫௯.) ஆகையால் ஸம்பத்தையும் (க்ஷேமத்தையும்) விரும்பும்மனிதரால் இவர்கள் ஆடையாபரணம்முதலிய வைகளால் உற்ஸவகாலங்களிலும் கல்யாணாதிகாலங்களிலும் எப்பொழுதும் பூஜிக்கத்தக்கவர்களாவார்கள்.

(௬0.) கணவனானவன் பத்தினியால் ஸந்துஷ்டனையும் பத்தினியானவள் பதியால் ஸந்துஷ்டியாயும் எக்குலத்தில் இவ்வாறு இருக்கிறார்களோ அக்குலத்தில் எப்பொழுதும் உண்மையாகவேகல்யாணம் (நன்மைவிருத்தியடைகின்றது.)

(௬௧.) ஸ்திரீயானவள்வஸ்திராபரணாதிகளால (அழகாய்) பிரகாசியாமலிருப்பாளாயின் (அப்பொழுது) பர்த்தாவை அவள்சந்தோஷிக்கச் செய்யமாட்டாள்; பர்த்தாவானவன்ஸந்தோஷமடையாமலிருப்பானாயின் பிரஜாஜனனம்ஜனிக்கவேமாட்டாது.

(௬௨.) எக்குலத்தில் ஸ்திரீயானவள் (ஆடையாபரணாதிகளால் அலங்கரிக்கப்பட்டு) பிரகாசிக்கின்றாளோ அக்குலம் முழுதும் விளங்குகின்றது. அவள்எக்குலத்தில் பிரகாசிக்கவில்லையோ அக்குலம் முழுதும் மலினமாய்விடும்.

(௬௩.) (ஆசுரம், பைசாசம்முதலிய) துர் விவாகங்களாலும் (ஜாதகர்ம முதலிய) கிரியாலோபங்களாலும், வேதாத்தியயனம் செய்யாததாலும், பிராமணபூஜையற்ற குலங்கள் (மகாகுலங்களாயினும்) நீசகுலங்களாகின்றன.

(௬௪.) சில்பசாஸ்திரத்தாலும், வியவ

காரத்தாலும் (வட்டிக்கிபணம்கொடுத்து ஜீவிப்பதினாலும்) சூத்திர ஸ்திரீயிடத்தில் பிரஜையை யுண்டாக்குதலாலும் குதிரை,வண்டி,பசு முதலியவற்றின் வர்த்தகத்தாலும், பயிரிடுவதாலும், இராஜஸேவையாலும்.

(௬௫.) யக்கியம் செய்யத்தகாதவர்களுடன் யக்கியம்செய்தலாலும், நாஸ்திக்கியமான (என்றால் கர்மத்தின் பொருட்டுசாஸ்திரத்தில் சொல்லியபலத்தைநம்பாமையாகியகர்மானுஷ்டானத்தாலும்)மந்திராதிகளால் விடுபடவும், குலங்கள்சீக்கிரத்தில் நாசமடைகின்றன.

(௬௬) மந்திரத்தால் ஸமிர்த்தியடைந்திருக்கும் (வேதாத்தியயனம் அவ்வர்த்தத்தை அறிந்துபெயர்பெற்ற) குலம்மிகவும் தனமற்றதாயினும் மஹாகுலங்களின் எண்ணிக்கையில் சேர்ந்து மகத்தானயசஸ்ஸையும் ஸம்பாதிக்கின்றன.

---

## பிராம்மதருமம்.

### எ - வது - அத்தியாயம்.

௬அ, அயிசுவரிய முடையவர்கட்கெல்லாம் சிரேஷ்டமான மஹேசுவரனையும். தேவதைகளுக்குள் (மனிதர்களைவிட உயர்ந்தபதவியிலிருக்கிறஜீவர்களுக்குள்)சிரேஷ்டமானதேவதையாயும், தலைவர்களுக்குத்தலைவனையும், பிரகாசவானையும், ஸ்தவனீயனையுமிருக்கிற லோகேசனைநாங்களறிவோம்.

௬௯. அவருக்குசரீரமும் கண்முதலிய இந்திரியங்களுங் கிடையாது. அவருக்கு ஒப்பும்உயர்வும் ஆனவர்கள்காணப்படவில்லை. அவரதுசிரேஷ்டமும் விசித்திரமுமான சக்திகளே (எங்கும்) கேழ்க்கப்படுகின்றன. அவருடையஞானபலக்கிரியைகள் இயர்க்கையாயுள்ளதுகள்.

௫0. 'உலகத்தில்அவருக்குஒருவரும்தலைவரில்லை. நியந்தாவுமில்லை. அவருக்கு அவயவங்களேயில்லை அவர் (ஸகல) காரணன். மனோநாயகன். அவரைப்பிறப்பித்தவர்களுங்கிடையாது. அவருக்கு அதிபருமின்று.

௫௧. இப்படிப்பட்டதேவன் எல்லாவற்றையும் படைத்தவர். இவர்மஹாத்துமா. இவர்ஜனங்களுடைய இருதயங்களில் எப்போதும் குடிகொண்டிருக்கிறார். அவரை சமுசயமில்லாதபுத்தியால்நோக்குங்கால் அறியலாகும். யார் அவரை அறிகிறார்களோஅவர்கள் நித்தியபதவியடைகின்றனர்.

௫உ. அறிவதற்கரிதானவரும்,சகலவஸ்துகளிலும்மறைவாய்பிரவேசித்திருக்கிறவரும், ஆத்துமாக்களிலும்ஸங்கடஸ்தானங்களிலுமிருக்கிறவரும், புராதனருமான அந்ததேவனைவிவேகிகள்(பரமாத்மாவுடன் தங்களுடைய ஆத்துமாக்களைச்சேர்க்கிறதாகிய) அத்தியாத்தும யோகத்தினாலறிந்து சுகதுக்கங்களைவிட்டு நீங்குகின்றனர்.

௫௩. யார்பிரமத்தை உயிருக்குயிராயும் கண்ணுக்கு கண்ணாயும் செவிக்கு செவியாயும் மனதுக்குமனதாயு மறிகிறார்களோ, அவர்கள் இந்தபழமையானவும் ஸர்வசிரேஷ்டமுமான பிரமத்தை நிச்சயமாய் அறிகிறார்கள்.

௫௪. உவமை யற்றவரும் நித்தியருமான பரமாத்மா ஒருவரென்றே தெரிந்துக்கொள்ள வேண்டியது. பரமாத்துமா நிருமலர் ஆகாசத்திற்கு மதிதி, பிறப்பற்றவர், சிறந்தவர், நாசமில்லாதவர்.

௫௫. யாரால் ஸம்வத்ஸராவச்சின்னகாலமானது அஹோராத்திரிகளைக் கொண்டுபரிவர்த்தனமாகிறதோ, அந்தஜோதிகளுக்கு ஜோதியும்ஆயுஷ்காரணனுமான நித்தியனை தேவதைகள். (மானிடர்களைவிட உயரறிவும் பதவியுமுடையஜீவர்கள்) உபாசிக்கின்றனர்.

௫௬. எல்லாம் அவருக்கு வசமாயிருக்கிறது. அவர்ஸகலத்திற்கும்நியாமகர்; எல்லாவற்றிற்கும் தலைவர். அவருக்கு நல்லகாரியங்களால் உயர்வாவது தீயவைகளால் தாழ்வாவது உண்டாகவேண்டுவதில்லை.

௫எ. இவர்ஸர்வேசுவரன். இவர்ஸகலவஸ்துகளுக்கு மதிபதி. இவர் சகலபூ

தபாலகர். இவர்உலகத்திற்குஅழிவுவாராதநிமித்தம் ஸேதுஸ்வரூபியாய எல்லாவற்றையும் தாரணஞ்செய்து கொண்டிருக்கிறார்.

ருஅ. இம்மண்ணுலகமும், விண்ணுலகமும, அந்தரிக்ஷமும், சகலேந்திரியங்களுடன் மனதும இவரிடத்திலேயேபற்றியிருக்கின்றன. அவரொருவரையேயறிந்துகொண்மின். பரமாத்துமாவுக்கன்னியமானவார்த்தைகளை விட்டுவிடுமின். அவர்மோக்ஷபதவிக்குசேறது.

ருசு. பரமாத்துமா பிறக்கிறது மில்லே, இறக்கிறதுமில்லே. அவர்ஸர்வக்ஞியர். அவர் ஒன்றிலிருந் துண்டாகிறதுமில்லே, தான்வேறொன்றாக ஆகிறதுமில்லே.

சூ0. யார் சோதிமயமோ, அணுவுக்குமணுவானவரோ, யாரிடத்தில்ஸகல உலகங்களும், அவ்வுலகங்களில் வஸிக்கும் ஜீவன்களும் இருக்கின்றனவோ, அவரே இந்தஸத்தியஸ்வரூபி. அவரே நித்தியர். அவரே (மனதினால்) அறியத்தக்கவர். ஓபிரியசிஷியனே அவரை (தியானத்தினால்) தெரிந்துக்கொள்.

சூக. பிரணவத்தை வில்லாகவும், ஜீவனை அம்பாகவும், பிரமத்தை அதின் லக்ஷியவத்துவாயும் சொல்லப் படுகிறது. இதை ஹ்ருஷ்வே மாதங்களின்றி, அறியக்கடவது. பாணத்தைபோலஇப்படி உபாஸிக்கிறவருடைய ஜீவன பரப்ரம்ஹமயமாய்விடுகிறது.

சூஉ. ஸமமாயும், சுத்தமாயும், மொறம்புமணலும் சுடுகையேறினசிறுமணலுமில்லாததாயும், உத்தமசப்தஜலாஸ்ரயாதிகளால்மனோரம்மியமாயும், பார்வைக்கு அஸஹியமானவஸ்துக்களில்லாமல் நல்லகாற்றும்வருகிற ஏகாந்தஸ்தலத்தில்சித்தத்தை பரப்பிரமத்தினிடத்தில சேர்க்கவேண்டியது.

சூங. மார்புகழுத்து சிரசு இம்மூன்றையும் ஸமமாய் நிமிர்த்திவைத்துகொண்டு, மனதுடன் ஸகல இந்திரியங்களையும் இருதயத்திற் பிரவேசிக்கச்செய்து, பரப்பிரம்ஹஸ்வரூபமாகியஓடத்தினால் ஸம்ஸாரசாகரத்தின்பயங்கரமான பிரவாகத்தை விவேகிகடக்கிறான்.

எ-ம்- அத்தியாயம் முற்றிற்று.

---

## தைத்திரீயோபநிஷத்து.

சீக்ஷாவல்லி - கக - ம் - அநுவாகம்.

க. வேதத்தை (நன்றாய்) கற்பித்து பின்பு ஆசாரியன் சிஷ்யனைப்பற்றி உபதேசிக்கின்றார்;—(எப்படியெனில்) ஸத்தியத்தை (உண்மையானவாக்கை)பேசு;—(வேதமுபதேசிக்கின்ற) தர்மத்தைச்செய்;—(நீ) அத்தியயனம் செய்வதினின்றும் பிசகாதே;—(அத்தியயனம்செய்தபின்)ஆசாரியனுக்கு இஷ்டமான தனத்தைக்கொண்டுவந்து (கொடுத்து) ஸந்தானத்தை (பிரஜாஸந்ததிக்கு) நாசத்தைச் செய்யாதே; —ஸத்தியத்தினின்று நீ பிசகக்கூடாது;— (வேதோக்தமாகிய) தர்மத்தினின்றும் (நீ) பிசகத்தக்கதன்று;—(உன்னிட) ஆத்ம க்ஷேமத்தினின்றும் (நீ) பிசகக்கூடாது;— ஸம்பத்தை (யளிக்கும்படியான சுபகர்மத்தினின்றும்பிசகததக்கதல்ல;—அத்தியயனம்செய்தல், செய்வித்தல்இவ்விரண்டினின்றும் பிசகத்தக்கதல்ல.—

உ. தேவ பிதிருக்களின் கர்மத்தினின்றும் (உன்னால்) பிசகத்தக்க தல்ல;—(நீயுன்) மாதாவையே தேவதையாகக்(கொள்வாயாக) ஆ; —(பின்பு) பிதாவையே (நீ) தேவதையென (க்கொள்வாயாக) ஆ; (பின்பு) ஆசாரியனையேதேவதையாக(க்கொள்வாயக) ஆ; —(பின்பு) அதிதியையேதேவதையெனக்(கொள்வாயாக)ஆ; —நிந்திக்கத்தகாத (குற்றமற்ற) கர்மங்கள் எவையோ;—அவைகளே ஸேவிக்க (அனுஷ்டிக்கத்)தக்கவைகளாம்;—(வேதவிருத்தமான எவ்வகைக்கர்மங்களும் (ஆசாரியராகிய எங்களால் அனுஷ்டிக்கப்படினும் அவை) அனுஷ்டிக்கத்தக்கதல்ல; —(ஆசாரியாளாகிய) எங்களிட (வேதத்திற்குஒத்திருக்கும்) சுபகர்மங்கள் எவையோ.—அவைகளே உன்னால் உபாஸிக்கத்தக்கவை;—

ங. வேதவிருத்தமாக ஆசாரியர்களால் அனுஷ்டிக்கப்பட்டிருந்தபோதிலும் அப்படிப்பட்ட)கர்மங்கள்உபாஸிக்கத்தக்கதல்ல;—நம்மிலும் சிறந்த (உண்மையான)பிராம்ஹணர்கள் இருப்பாராகில்,—நீ அவர்களுக்கு ஆஸனம்கொடுத்து அவர்களின்சிரமத்தைப் போக்கடிப்பாயாக;—சிரத்தையுடன் (அன்புடன்) தானம்செய்யவேண்டும்; —அச்சிர

த்தையுடன் சொடுக்கத்தக்கதல்ல ;—ஸ்ரீயுடன்(அதிசஸம்பத்கரமாய்) கொடுக்கத்தக்கது ;—லஜ்ஜையுடன் கொடுக்கத்தக்கது ;—பயத்துடன்கொடுக்கவேண்டும்;—கியானத்துடன்(தானத்திற்குதகுந்தபாத்திரமறிந்து) கொடுக்கவேண்டும் ;— (நீ) இப்படிக்கிருக்கையில் (ச்ரௌதாதி) கர்மத்திலாகிலும், அவைகளை நடத்தும்விதத்திலாகிலும் உனக்கு ஸம்சயமுண்டாகுமாகில்,—

௪. அப்பொழுது அவ்விடத்தில் (அவைகளை) விசாரிக்க யோக்கியாளாகிய பிராம்மணர்கள் யார் இருக்கிறார்களோ, — (அவ்வகைத்தொழிலில்) உத்யுக்தாளாகியும், வேறு காரியத்தில் பிரவேசித்திருப்பராயினும்,—கோபமற்றவரும், தர்மத்தில் இச்சையுள்ளவரும்,—அவ்வகைக்கர்மங்களில் அவர்களெப்படிக்குநடந்துகொள்கிறார்களோ,—அப்படிக்கேஅக்கர்மங்களில்(நீயும்)நடந்துகொள்வாயாக ;—இஃதேவிதிஇஃதே(ஆசாரியாளாகியஎங்களுடைய) உபதேசம்;—இஃதே வேதத்தின் உபனிஷத் (துகளின் இரஹஸியம்);—இஃதே (ஜகதீஸ்வரனிட) ஆஞை ;—எல்லோராலும் இவ்வாறே உபாஸிக்கத்தக்கது ;— இவ்வாரோ (எல்லோராலும்)இவைஉபாஸிக்கத்தக்கவை யாகின்றன.

சீக்ஷாவல்லி முற்றிற்று.

## உபந்நியாஸம்.

கருணையின்பிரவிருத்தியையைக்குறித்து யோசிக்குங்கால்,அதற்குசெய்வதிலும், சகிப்பதிலும் இடமுண்டென்று ஏற்படும். செய்வதில் பிரவர்த்திக்கும்போது அதற்கு அவுதாரியமென்றும், சகித்தலில் பிரவேசிக்கும்போது க்ஷமையென்றும், அதைவியவஹரிப்பார்கள். இவற்றுள் ஒவ்வொன்றையும்தனித்து விசாரிப்போம். மன்னுயிரொல்லாம் தன்னுயிராய்மதித்து, அவற்றிற்கின்பமுண்டாக்கி, அவர்களின்பப் புசிப்பைக்கண்டு மனமகிழ்வதே உண்மையான அவுதாரியமாகும்.அவுதாரியத்துக்கு வரம்புகூறுங்கால், "உன்நிலையைக்காக்கக்கோரில்உன்வரவில் "பாதியைமீத்து. செல்வவானாகவேண்டுமெ "னில மூன்றிலொன்றுசெலவழி." என்றுலார்ட்பேக னுரைத்திருக்கின்றார் என்றால் நித்தியச்செலவுஎவ்வளவோ, அவ்வளவுநைமித்திகச்செலவுநேரிடுமாகையால், ஒருவனுடையவரவில்நித்தியச்செலவில்பாதியும்நைமித்திகச்சலவில்பாதியும்செலவழியுமெனில் ஒருவன்பணக்காரனுமாகாமல்கடனாளியுமாகாமல் என்றும்பழயநிலைமையிலே யிருப்பானென்பதும் ;நித்தியநைமித்திகங்களுக்கிரண்டுபங்குபோகஒருபங்குமீறுமெனில்ஒருவன்செல்வவானாகலாமென்பதுமே அவர்உபதேசத்துக்குப்பொருளாம்.உண்மையானஅவுதாரியத்தையனுஷ்டிக்கவிரும்புவோர்,அதற்குடன்பிறப்புகளான இரண்டுதுர்க்குணங்களைக்கவனத்தோடுசேர்ந்தொழிக்கவேண்டும். அவையாவெனில்கார்ப்பண்யமும்,அதிவிரயமுமேயாம். "அதிஸர்வத்ர வர்ஜயேத்" என்கிறநியாயத்தாலே,அதியாய்ச்செலவழித்தல், அதியாய்ச்சேர்த்தல், இவ்விரண்டும் சமமாய்க்குற்றமாகு மென்றேற்பட்ட போதிலும், அவற்றிற்குரிய ஹேதுமனதிற் பொருந்தும்பொருட்டு சற்று விரித்துரைக்கவேண்டியதா வசியகமாகிறது.தானும் உண்ணாமல்; பிறர்க்கும் அளிக்காலிருக்கப்பொருள் சேர்ப்பவர் சிலருண்டு. பொருளுடையகிருபணனுக்கும், புதையலுடைய பூமிக்கும்பேதமுண்டோ. இவ்வாறு வீணுக்குப்பொருள் சுமப்பவரோ "குங்குமம்சுமந்த கழுதையென்னும்" வாக்கியத்துக்கு லக்ஷியமாவார்கள். பொருளினாலடையவேண்டிய பயனெல்லாங்கூடித்தாமுண்பதும்,பிறருக்களித்துக் களிப்பதுமேயாகும். இவ்விரண்டுபயன்களுமுண்டாகாத விடத்தில் பொருளிருந்தென்ன, ஒழிந்தென்னவாம்.தாம்,தம்மவர், அயலார் ஆகிய மூவகையாரையும் ஓம்பிக்காக்கவேயல்லவாபொருள்படைத்தல்.இவற்றையறிந்தொழுகாதவன் கிருபண சிரோமணியென்று தூஷிக்கப்பெற்று, தனக்குமுதவியின்றி பிறருக்கும் பயனின்றியொழிவான்.

கார்ப்பணியத்தைப் போலவே அதிவிரயமும் தூஷியமாகுமோ வெனில் அதைச்சற்று விளக்குகின்றேன். நமக்குநேரிடும்விரயங்கள் மூவகையனவாம், ஆவசியகம், ஆனுகூலியம், போகம், ஆகிய இம்மூன்றின் சுவரூபமென்னவெனில், நமதுயிர்வாழ்க்கை நிலைப்பதற்கத்தியா வசியகமாகிய உண்ணல் உடுத்தல், உறங்கல்மூன்றும் முதல்வகுப்பினவாம். உணவிற்குவேண்டியபாத்திரங்களும், உறைதற்கு வேண்டியவீடுகளும், திரிதற்குவேண்டிய வண்டிகளும், இன்னுமித்தன்மையான பலபொருள்களும், ஆனுகூலியங்களிற்சேர்ந்தவையாம், இவையுண்டியுறக்கங்களைப்போல் அத்தியாவசியமானவையாயிராவிடினும், அவரவர்சமுகத்தில் கவுரவமாயும், வருத்தமின்றியும் வாழ்க்கையை நடத்த ஆவசியகமேயாகும். நமதுயிர்வாழ்க்கைசவுக்கியமாய் நடப்பதற்குரியவீடுவண்டிமுதலியவையானுகூலியங்களாகவும், ஊணுடுப்புகள் ஆவசியகங்களாகவுமிருக்கினும், பொன்வெள்ளிபாத்திரங்களில் பஞ்சப

க்ஷியபரமானனங்களுடனுண்பதும், லஸ்தர் குளோபு, படம் பங்காமுதலியவற்ருல் அலங்கரிக்கப்பட்டிருக்கிற பங்களாமுதலியவற்றில் வசிப்பதும், சரிகைபட்டுகளோடு கூடியவிலையிற்சிறந்த வஸ்திரங்களையும், ஆபரணங்களையும் தரிப்பதும் பலகுதிரைகளிழுக்கும் வண்டிகளில்திரிவதும், இன்னுமித்தன்மையான அனேககாரியங்களும் கேவலம்போசானுபவமாகும். இவற்றுள் ஆவசியக ஆனுகூலியங்களை யெக்காலும் நிங்கிக்சப் பொருந்தாது. கேவலம் சம்ஸாரிகளுக்கு மாத்திரமேயன்றி. துறவடைந்து தெய்வத்தைத்தியானிப்பவருக்கும், இவையில்லாமல்முடியாது. குற்றமற்ற போகங்களையும் அனுபவிப்பதில்பழுதில்லை. பாபஹேதுவானவும், நம்முடைய தர்மானுஷ்டானத்துக்கு ஹானியானவும்போகப் புசிப்புமாத்திரமே தூஷ்யமாகும். இவ்வித தூஷ்யமான போகத்தைவிட்டொழிக்கும்பெருட்டு நாமறிந்துக்கொள்ளவேண்டிய தர்மசூக்ஷமமொன்றுண்டு அதென்னவெனில் நாம் நம்மவர் அயலார் என்னும் மூவகையாரில் ஒருவகையைக்காப்பதில் மற்றவைக்கு ஹானியின்றி அனைவரிடத்திலும் நமக்குள்ள கடமைகளைத்தவிருது செலுத்தவேண்டுமென்பதேயாம். அதின் தன்மையைக்குறித்து விசேஷமுரைக்கவேண்டியதில்லை. தாய்தந்தைமக்கள்மனைவிமார்களேதம்மவராவார். தாயாதி, பந்து, நண்பர்வறியோர்கள், அயலாரென்னும்மூன்றும்வகுப்பைச் சேர்ந்தவராவார்கள். நாம் படைக்கும் பொருள்களுக்கு தோற்றத்தில் நாம்மாத்திரமே கர்த்தர்களாய் விளங்கினும், உண்மையில் இம்மூவகையாருக்கும் அதில்பாத்தியமுண்டு. ஆகிலும் அவ்வனைவருக்கும் அதில் சமமான பாத்தியமுண்டென்று நானுரைக்கவில்லை. நாமிந்த பூமியிலுதிப்பதற்குமுன் முதல் நம்மை வெகுபரிவுடன்காத்து, மஹிமையுடன் வாழ்வதற்குரிய சாதனங்களை யளித்ததற்காக, தாய் தந்தைகளையும்; பெற்ரேர்பிறந்தோரையும், வீடுவாசல்களையும்விட்டு, தமக்கு எல்லாம் நாமேயென்று நம்பியடைக்கலம் புகுந்துதம்முயிருள்ளவரையில் நம்முயிரைக்காத்து, பிறகும்சுக சந்தோஷாதிகளுக்குஹேதுவான புதல்வரைத்தருகின்றமனைவிமாரும்; "ஆத்மாவைபுத்ர நாமாஸி" (நாமேபுத்திரனாய்மறுவுருவெடுக்கிறோம்) என்றுவேதத்திலும்கூறப்பெற்றுஅவர்க ளிளமையில் நம்மையே ரக்ஷகராய் எதிர்பார்த்துத்தோன்றி, இடையில்நமக்குச் சகலஇன்பங்களையுந் தந்து, வார்த்திகத்தில்நமக்கு ஊன்றுகோலாய் உதவுகின்ற மக்களும், நாம் சிரமப்பட்டுப் படைக்கும் பொருள்களில் சமமானபாத்தியமுடையவர்களென்பது அதிசயோக்தியாகமாட்டாது. இதுபற்றியே தர்மசாஸ்திரங்களில் தாயக்கிரமத்தைக் கூறுங்கால், தந்தைதாய்மக்கள்மாரனைவரும் சமமாய் பங்குபிரித்துக்கொள்வது உத்தமமென்றும், தர்மயுக்தமென்றும்கூறியிருக்கின்றது. தாயானுக்கிரமத்தில் மக்களைமுதன்மையாயும், மனைவியை யிரண்டாவதாயும், தாய்தந்தைகளை யவளுக்கும் பின்னிட்டவராயும் கூறியிருப்பதால் இவர்களுக்குள்ளும் தாரதம்மிய மேற்படுகிறதேயென்ருல், அது கேவலம் லவுகிகஆனுகூலியத்தைப்பற்றிய அப்பிரதானவைலக்ஷணியமாக விருக்கின்றது. கூடியவரையில் சுவபாவத்தையேயனுசரித்துப் பிரவர்த்தித்த நம்முடையதாயக் கிரமதர்மசாஸ்திரங்களிலும் சிலபழுதுகளிருக்கினும், உலகத்திலுள்ள மற்ற தாயானுக்கிரமணிகைகளைவிட நம்மது மிகச்சிறந்ததாயும் தர்மயுக்தமானதாயுமிருக்கிறது. இத்தன்மையான தர்மசாஸ்திரங்களையும் கவனிக்காமல் நாம் அதிவிரயம்செய்வோமாகில், நம்மவருக்குரித்தான பாகத்தையும் விரயம்செய்யும்படி நேரிடுமாகையால் நாமவர்களை வஞ்சித்தவராவோம். அவர்களை வஞ்சிக்கவே நியாயத்தைக்கடந்தவராவோம். ஆகையால் அதிவிரயத்தையும் ஒழிக்கவேண்டியதாவசியகமாகும். அவுதாரியத்துக் கியல்பாயுள்ள சத்துருக்களாகிய கார்பணியம், அதிவிரயம் என்னும் இருவகைதர்க்குணங்களையும் ஒழித்து தர்மத்தை யியற்றப்புகுங்கால், பாத்திரவிசாரம்செய்யவேண்டிய தாவசியகமாகிறது. கடவுளானவர்யோக்கியர், அயோக்கியர் அனைவர்க்கும் உணவைக்கொடுப்பதுபோலும், மாரியானது, அமுதம், விஷம் முதலிய சகலவித ஒஷதிகளுக்கும் நீரையளிப்பதுபோலும், பாத்திரதாரதம்மியம் விசாரிக்காது கொடுப்பதே உத்தமபுருஷலக்ஷணமென்று நம்மவர் கூறுவார்கள். இந்ததிருஷ்டாந்தங்களை யிவ்வாறே பயன்படுத்திக்கொள்ளவேண்டியதென்ருலும், இவ்வாறு அனைவர்க்குங்கொடுக்க கடவுளுக்கும் மாரிக்குமுள்ள நிரவதிகமான அவகாசம் நமக்கில்லையல்லவா? இந்த திருஷ்டாந்தங்களையே யின்னுஞ் சற்றுகவனிக்குங்கால், அக்கடவுளும் சுவரூபவைலக்ஷணியமின்றி ஆவசியகத்தைமாத்திரமளிக்கிருரோ யல்லாமல், எல்லோர்க்கும், ஒரேவிதமான சுகானுபவங்களை யளிக்கின்றதில்லையென விளங்குமாகையால், அவரும் பாத்திரவைலக்ஷணியத்தை யோசித்தவரோயாகிருர். அவர் அளவற்ற அகண்டஐசுவரியத்தையுடையவராகையால், அவர் தம்மு

டைய சக்தியை யோசிக்கவேண்டிய ஆவசியகமின்றி, நம்முடைய ஆவசியகத்தைமாத்திரம் யோசிப்பது போதுமாயிருக்கும். நம்முடைய செல்வத்துக்குப் பரிமிதமுண்டாதலால், குபேரசம்பத்துடையவன்கூட உலகிலுள்ள வறுமையெல்லாம் நீக்க அசக்தனாக விருப்பான். ஆகையால் அவனவன் தன்தன் சக்திக்கியைந்தவளாயில் உபகாரம்செய்ய வேண்டியதேதருமமாகும். அன்றியும் மேற்கூறிய திருஷ்டாந்தங்களால் இன்னுமொரு தருமசூக்ஷ்மம் துவனிக்கின்றது. "கைம்மாறுவேண்டாகடப்பாடுமாரிமாட் டென்னாற்றுங்கொல்லோவுலகு" என்று தன்னிடத்தில் நீரைப்பெற்றவர்கள் பிரத்தியுபகாரம்செய்யவேண்டுமென்றெதிர்ப்பாராமல்கேவலம் தன்தருமத்தையேநோக்கி மாரிபொழிவதுபோல், கொடுப்பவரும் பிறர்மகிழ்ச்சியைக்கருதாது, நம்முடைய கடமைகளின் சுவரூபத்தைமாத்திரம் யோசித்துக்கொடுக்கவேண்டுமென்பதேயாம். பிறர்மகிழ்ச்சியைக்கோரியளிப்பதுகொடையாகமாட்டாதோவெனில், அவருடைய ஈகைக்கு பிறர்மகிழ்ச்சியே விலையாகிவிடுகின்றமையால், பின்னிட்டுவரும் பெரும்பயனிற் கிடமில்லாமற்போகும். மேலும் புகழ்வோர்க்கே கொடுக்கும்பக்ஷத்தில், நம்முடையசெல்வம் உண்மையான ஸத்பாத்திரங்களிடத்திற்செல்லாது, மானத்தைவிட்டு நரஸ்துதிசெய்து வயிறுவளர்க்கும் சோம்பேறிகளிடத்தே பயன்படும். இதினாலெல்லாம் பாத்திரமறிந்து உதவிசெய்வது ஆவசியகமென்றேற்படுகின்றமையால், இனி பாத்திரசுவரூபத்தைக் குறித்து விசாரிப்போம். நம்முடையகொடையின் சுவரூபத்துக்கேற்றபடி பாத்திரசுவரூபமும் மாறுமாகையால், ஈகையின்வேறுபாடுகளைத் தனித்தனியாய் யோசிக்கவேண்டும். அப்படிசெய்வதில் ஒவ்வொன்றையுங்குறித்து விசாரித்து முடியாதகையால், வித்தியாதானம், அவுஷததானம், அன்னதானம், வஸ்திரதானம், கன்னிகாதானம், உபநயனதானம், சுவர்ணதானம், பூதானம், தானியதானம், ஆகிய இந்த ஒன்பது வகுப்புகளைக்குறித்து விசாரிப்போமாகில், சகலவிததானங்களையுங்குறித்து விசாரித்தவரோயாவோம்.

சகலதேசத்தாராலும்சகலசமயத்தாராலும்சகலதானங்களிலும்சிறந்ததாய்க்கொள்ளப்படுவதுவித்தியாதானமொன்றே. இது ஒன்றுதவிர மற்ற சகலவிததானங்களிலும்கொடுப்போர்க்குப்புகழும் கொள்வோர்க்கிகழ்ச்சியும் கொள்ளப்படுவதற்கு "நல்லாறெனினுங்கொளறீது, மேலுலகமில்லெனினுமீதலே நன்று" உலகத்தாரெல்லாம் ஒன்று கூடிகொள்வதை நல்வழியென்றுபுகழ்ந்தாலும் அது தீதேயாகும்; கொடுத்தல் மோக்ஷஹானியென்று அனைவருமிகழ்ந்தாலும் அதுநல்லதல்லதேயென்றுதிருவள்ளுவநாயனாருரைத்ததே சாக்ஷியாகும். இந்த வித்தியாதானம் ஒன்றில்மாத்திரம், கொடுப்போர்கொள்வோர் இருவர்க்கும் மேன்மையுண்டாகுமேயன்றி யொருக்காலுந்தாழ்வுண்டாகாது. மற்றபொருள்களையளித்தால் அவைகாலத்தால் குன்றுவதுசகஜம். வித்தியாதானத்திலோவெனில் கொடுப்போர் கொள்வோர் இருவர்க்கும் ஞானம் விருத்தியாகுமேயன்றி ஒருவர்க்குங்குறையாது. இதரதானங்களில் உடனே மறைந்துபோவன சிலவாயும், சுவல்பகாலத்தில் மறைந்துபோவன சிலவாயும் கொள்வோர்க்கு ஒரு நொடிக்காலமுதவுகின்றன சிலவாயும், சுவல்பகாலம் உதவுகின்றன சிலவாயுமிருக்குமேயன்றி என்றும் நிலைத்திருப்பன ஒன்றுங்கிடையாது. வித்தியாதானமோ வெனில் ஒருக்காலமும் மறையாது பெற்றவருடைய உயிரளவும் இஹத்தில் உதவுவதுமாத்திரமேயன்றி பரத்திற்கும் நிலைத்தபயனளிக்கும். இந்ததானத்தைப்பெறுவதற்குப்பாத்திரம்யாரென விசாரிக்கப்புகுங்கால்அதைவிரும்புவோரனைவரும்பாத்திரரென்றே யேற்படும். சகலவிததானங்களிலும் கொடுப்போர் சக்தியையும், கொள்வோராவசியகத்தையும்யோசிப்பதுபோலவே இதிலும் யோசிக்கவேண்டியதேயன்றி வேறுவிதமாய் பாத்திரவிசாரம் செய்யப்புகுவதுப் பழுதேயாகும். கடவுளமைப்பில் ஞானத்தைவிடப் பிராணிகட்குஆவசியகமானபொருள்வேறொன்றுமில்லை. கர்மதேஜஸில்லாவிட்டால்மனிதனுக்கு ஒருகாரியமும்முடியாதாயினும், குருடனைப்போல் தடவிக்கொண்டு நகரவாவதுகூடும். ஞானதேஜஸில்லாவிடிலோ, கல்லுமரம் முதலியவற்றின் ஸ்திதியிலேயேயல்லவா நாமுமிருக்கவேண்டும். அத்தியாவசியகமானபதார்த்தங்கள் அபரிமிதமாயிருந்தாலன்றி தமதுசிருஷ்டி நிலைத்து விளங்காதென்று கருதி, கடவுளானவர் அனைவரும்வேலையும்சிரமமுமின்றிவேண்டியவளாயி லடையக்கூடியதாய் எங்கும் ஒளியை அமைத்திருப்பதை யறிந்திருக்கும் நாம், அந்தகர்மதேஜஸை உபமாகக்கூட எட்டமாட்டாத அத்தியாவசியகமான ஞானதேஜஸை அனைவருக்கும் பயன்படக் கூடாதென்போமாகில் அது யுக்திக்கடுக்குமோ; அல்லது மாடுகுதிரைகளைப்போல மனிதரிலும் சிலர் ஞானத்துக்கு இயற்கையிலே யனர்ஹராயிருந்தாலும், அவர்களுடைய ஞானவிருத்தியின்பொருட்டு முயலாமை தோஷமா

கமாட்டாதோ? அப்படிக்கன்றி வர்ணாசிரமதர்மங்களைவைத்திருப்பதினாலாவது விட்டொழிப்பதினாலாவது, ஒரு ஏற்றக்குறைவுமின்றி, கண்வாய் மூக்கு செவிமுதலியபஹிரிந்திரியங்களும், புத்தி, மேதை, தாரணம்முதலியஅந்தரவயவங்களும்பெற்றிருக்கும்மானிடப்பிறப்புக்குள் சிலர்ஞானத்துக்கு அதிகாரி யென்றும், பலர்அதிகாரிகளல்லவென்றும்நிர்பந்தங்களை யேற்படுத்தி யனுஷ்டிப்ப துநமதியல்புக்கு அடுக்குமா, பொதுதருமத்துக்கடுக்குமா, கடவுளின் அமைபபுக்கடுக்குமா ? இவ்வித நிர்பந்தங்க ளிருக்கின்றனவாவென்று மலைக்க வேண்டாம். சூத்திரர்களுக்கு வேதவேதாந்தாதி விஷயங்களை யதகரிக்கவே யதிகாரமில்லையென்றும், வைசியக்ஷத்திரியர்கள் அவற்றையப்பியசிக்கக்கூடுமெனிலும், பிரவசனம்செய்யக்கூடாதென்றும்இரண்டையும்செய்யப் பிராமணனுக்கு சாமான்னியமாயதிகாரமுண்டெனிலும், அவனும் ஆசாரியமுகமாயன்றி அவற்றைக் கற்கக்கூடாதென்றும் ; பலவருஷகாலம் குருகுலவாசம் செய்தாலன்றி அவனுக்கும் ஆசாரியன் உபதேசிக்கக் கூடாதென்றும்; இத்தன்மையான விஷயங்களெல்லாம் ரகசியமென்றும்மந்திரமென்றும்மூடிவைக்கவேண்டியதென்றும் ; யுக்தாயுக்த விசாரசுவபாவத்தையெல்லாம்விட்டொழித்துக் கையைக்கழுவிவிட்டு, சொல்வதற்கெல்லாம் தலையாட்டிக்கொண்டிருக்கும் நிலைமைக்கு வந்தாலொழிய ஒருவனுக்கும் உபதேசிக்கக் கூடாதென்றும் நிர்ப்பந்தங்களேற்படுத்தி யிருப்பதுஅனைவர்க்குந்தெரிந்த விஷயம். இந்தநிர்ப்பந்தங்களெப்போ தேற்பட்டபோதிலும், இது கேவலம்சங்கேதமேயன்றி சுவபாவமாக மாட்டாது. இத்தன்மையானசங்கேதங்கள் எவ்விதகிரந்தத்தி லேற்பட்டிருந்தபோதிலும் கவுரவிக்கத்தகாததேயாம். ஆகிலும் ஆசாரியசிஷ்யக்கிரமமே வேண்டியதில்லை யென்பது எங்கள்கருத்தன்று. பலவித தொல்லைகளிலகப்பட்டிருக்குமனைவரும் சகலதருமங்களையும் தாமாய்க்கற்பது அசாத்தியமாயிருக்குமாதலால் கல்வியிலே தொண்டுபட்டபெரியோர்களின் சகாயத்தால்கற்கப்புகுவது உசிதமே. இந்தநிமித்தம் கற்பிக்கத்திறமுடையோரெல்லாம் ஆசாரியர்களாகவும், யோகியராயும், கற்பனைக்குப் பாத்திரமானவரெல்லாம் சிஷியராகவு மிருப்பது யுக்திக்குப்பொருந்துமாகிலும், ஒரெழுத்துந் தெரியாமல் உடலெல்லாம் சித்திரம்வைத்து என்னப்பன்கூத்தாடி யெனக்குப்பிச்சை, என்றுவம்சபாரம் பரியமாய் ஆசாரியபும்ஸ்துவத்தைவகித்துக்கொண்டு, ஆடுமாடு, செம்புதவலைமுதலியவற்றை விபாகம் செய்துக்கொள்வதுபோல சிஷியாக்களையும் பங்குபிரித்துக்கொள்வதும். ஒருவன்தன்னுடைய பரம்பரையான ஆசாரியனைவிட்டு அன்னியரிடத்தில்ஆசாரியவர்ணம் செய்யக்கூடாதென்பதும், ரஹசியவிஷயங்களைமஹாவிசுவாசமுள்ள தம்சிஷியர்தவிரமற்றொருவருர்க்குச்சொல்லக்கூடாதென்றும் நிர்பந்திப்பதும் எந்தஹேதுவைப்பற்றி யென்று விசாரிக்கப்புகுங்கால் சமாதானம்விளங்காது. சகலவிஷயங்களையும் அனைவரும் சுவயமாயாவது, இஷ்டாமானவரைக் கொண்டாவது கற்கக்கூடுமென்றால் வேறுவிதமாய் ஜீவனம்செய்யமாட்டாதபலருக்குபிழைப்புகெட்டுப்போகுமென்றசுவப்பிரயயோஜனத்தைக்கருதிபிராமணர் இத்தன்மையான சங்கேதமுண்டாக்கிக் கொண்டார்களென்று கொள்ளவேண்டியதோ, அல்லது வெளியிற்சொன்னால்வெட்கக்கேடென்கிற ஹேதுவினால் ரகசியமாய் வைத்துவருகிறார்களோ என்கிறசங்கை சுவபாவமாய் ஜனிக்கிறது. சற்றுயோசிப்போமாகில், இவ்விரண்டும் அதற்கு ஹேதுவாகவிளங்கும். அதெப்படியெனிலதை யொருதிஷ்டாந்தத்தால்விளக்குகின்றேன். பிறருதவியின்றி சுவபாவமாய் சகலசாஸ்திரங்களையும் அறிந்துகொள்ளத்தக்க ஒருபண்டித சிரோஷ்டர், கைநாட்டுப்போடும் குருவினிடத்தில் உபதேசமின்றி வேதாந்தசாஸ்திரத்தைக்கற்றானென்று இனத்தாரெல்லாம் நிந்திக்கத் தலைப்படவே, அவர்மனம் வருந்திசுண்டத்துவ வியாப்பியஜாதி விசேஷத்துவம் என்கிறலக்ஷணத்தையுடைய ஆசாரிபுருஷனிடத்தில் உபதேசமில்லாதவனாயில் நமக்குசுவரூபம் சித்திக்காமற் போகிறதல்லவாவென்றுசிந்தித்து தமதாசாரியனுக்கு வெகுபணம்கொடுத்து முதல்சுலோகத்தின் எழுத்துத் தொடர்ச்சியை ஆசாரியன்சொன்னபிறகு அதை யுச்சரித்துமணம்பெற்றது பலருக்கு பிரசித்தமாய்த் தெரிந்திருக்கும். இத்தன்மையானபயனற்ற சங்கேதங்களைகவனித்து வித்தியையையாசிப்பவருக்கு அதைக்கொடாமலிருப்பது மகாபாபமாகும். ஆகையால் வித்தியாதானத்தைப்பெறவிரும்புவோரனைவரும், அதற்குபாத்திராவார்களென்றுகொள்ளவேண்டியது.

## நிருபங்கள்.

---

கூடலூர்பிராந்தியத்தில்

பரஞூஹஸஜனை

ஆரம்பம்.

தத்வாமிரதம்பொழியும்தத்வபோதினி.

யின், பத்திராதிபருக்கு பரிவுடன்வந்தனம்பணிவாய்தந்தனன்.

அய்யா.

கூடலூருக்கடுத்த திருப்பாதிரிப்புலியூரில் இந்தமார்கழி௴ பீடைதினங்களென்றெண்ணிகாலை-௪-மணிக்கெல்லாம்சைவரிற்சிலர்அவரதுசமயவிக்கிரகங்களைப்பூசிக்கவேண்டுமென்றும், அப்படி செய்யார்வாயிற்றெருமண்ணென்றும், இராமானுஜபத்தரிற்சிலர் அவரதுசமயத்திற்குரியவிக்கிரகங்களை பூசிக்கவேண்டுமென்றும், அப்படி செய்யார்வாயில் மண்ணென்றும் பலவிதமாக வீதிகடோறும் வீண்கீர்த்தனைகளைப் பாடி ஊர்கோலம்வரத்தொடங்கிஜனங்களைபிரமிக்கச்செய்தார்கள். இதைப்பார்த்துமனமிரங்கி இப்படிப்பட்டமயக்கத்தை நிவர்த்திப்பதேமானிடஜன்மத்துக்குரிய தருமங்களிற்பெரியதென மிகநன்றுய்யோசித்த ஷெயூரில்வசிக்கும் ஒருகண்ணியவானாகிய ஸ்ரீமத் - சம்பேடு ஸ்ரீதரஸ்வாமிநாயகரெனபவர் விக்கிரஹசேவையையும், மானிடஸ்துத்தியததையும் நிக்கிரஹித்து ஸர்வோத்கிருஷ்டமும் ஸர்வமத ஸம்மதமுமான, பிரமத்தையே தினம்பாடி பிராம்மஸமாஜத்தைச்சேருவதேநலமென சிலகிருதிகளையுண்டாக்கி அதுகளை தன்னிஷ்டர்களிற்சிலரைக்கொண்டு கீதவாத்தியங்களுடன்பாடவைத்து தானும் அவர்களோடு வீதிகடோறும்வரத்தலைப்பட்டார். இதனால், இராமானுஜபத்தர்களுக்கு விசேஷ வைஷம்மியம்பிறந்து அவரது கிருதிகளைசற்றேனும் கவனியாமலும் தாங்க ளபிப்பிராயபட்டிருப்பது பிசகென அக்கீர்த்தனைகளால்வெளியிடுவதற்குபிரதிகூட யுரைக்காமலும் அவர்கள்சாதாரணமாய் பழையபாட்டுகளைப்பாடிக்கொண்டுவந்துபரோக்ஷத்தில் தூஷித்ததுந்தவிரபாமர பிராமகமாகும்படி பலரைபலவந்தமாய் கும்பல் சேர்த்து தீவர்த்திகள் போட்டுக்கொண்டு டம்பாகாரமாய் ஒருநாள்மாலை ௫ - மணிக்கு புறப்பட்டு முன்போலவேபாடிக்கொண்டுவந்தனர். அப்பாட்டுகளின்ஸ்வரூபத்தையெல்லாம் எடுத்துரைக்கின் விரியுமாதலின் கும்பீபாக நியாயமாய் விவேகிகள் தெளிந்துகொள்ளும்படி அவர்களந்த ஊருகோலத்தில சொன்னஒன்றை சூசிப்பிக்கிறேன். சாதாரணமாய் துக்குடாவெனச்சொல்லுகிறகீதமாகக்கருதி ஒருமணிநேரம் "రామనిన్నే సదా" "రామనిన్నే సదా"வென்று அவர்கள் நூதனமாக யிட்டுககொண்டுவந்த பாடகரால்கோஷிக்கச்செய்தனர். அவரந்தகோஷ்டியில்மதிமயங்கினவராய் சுமாறுஅரைமணிநேரம் கோஷித்துவிட்டு, பக்கத்தில் பருத்த நாமத்தைதரித்து நின்றிருந்த ஒரு பரமபாகவதரை அதென்னபாஷையென, அவரது தெலுங்கென்றுரைத்ததைகேட்டு பாடகர் புத்திசாலியானதினால் திருப்தியடையாமல் அதின் கருத்துதானென்னவென மீண்டும்வினவினார். பாகவதர்மிகுந்த ஆர்த்தியுடன் "பிண்ணாக்குக்குஅருத்தம்" என கைவிரித்துகாட்டினர். பாடகர்வுடனே தன்னை அழைத்துவந்த பாகவதரின் ஸ்வரூபமின்னதென தெரிந்துக்கொண்டவராய் தன்னையழைத்துவந்தவர்களை அவமானம்செய்யலாகாதென்றெண்ணி இதைதமிழாகவைத்துகொள்ளுங்களென்றுசொல்லி "ராமனைநினைஸதா" வென்றுபாடிப்போயினர். பாடகர்யுக்தியாய் அதையப்போது திருத்தாமல் போவாராயின் இதுகாலாந்திரத்தில் அந்தபஜனையைச்சேர்ந்தவருக்கு மகாமறைப்பொருளடங்கியதிருமொழியாய்விடுமல்லவா!

இதுநிற்க, இவ்விதமாய் இராமானுஜபக்தர்களும் சைவர்களும் ஒருவருக்கொருவர் விரோதமாக, மார்கழி௴ முழுமையும் பெரும்பாலும்காலைப்பொழுதில் ஊருகோலம்வந்து அவர்களுடையபஜனைகளைமுடித்தார்கள். பரப்ரஹ்மஹஜனையோவெனில், ஷெ௴- ௨௦௳முதல் ஆரம்பித்து ௯ - நாள்வரையில் காலைநேரங்களில் ஊர்பிரதக்ஷணம் வந்தது. பத்தாம்நாள் காலையிலின்றி மாலைநேரத்தில் ஷெ ஹஜனையாரும் அவர்களுடைய மித்திரர்களுமாக அவ்வூருக்கத்சமீபத்திலிருக்கிற கெடிலநதீதீரஞ்சென்று, அவ்விடத்தில்பிராமணர்களால் செய்யப்பட்டு வந்திருந்த தளிகைகளைபுசித்துவந்து அவர்களது ஹஜனைமண்டபத்திற்சேர்ந்து, புஷ்பசந்தனாலங்கிருதர்களாய் அங்கிருந்து ஹஜனை செய்துகொண்டே ஊர்பிரதக்ஷணம்வந்து இடஞ்சேர முன்னுத்தேசியமும் பிரோபனையுமின்றி அய்யனருளால் அகஸ்மாத்தாய் ஆரம்பித்த இந்த பரப்பிரமோத்ஸவம் அவனது அனுக்கிரகத்தினாலேயே நிர்விக்கினமாய் நிறைவேறிற்று. அந்தஹஜனையார் அதனால் அவர்களனுபவித்த ஆநந்தத்தையும் இதன்மூலமாக அப்பிராந்தியத்திலுண்டான தத்துவவிசாரத்தையுங்கருதி வருஷாவருஷம் இவ்வாறே செய்ய உத்தேசிக்கின்றனர். பிறகு திருவருளெப்படியோ அறியேன்.

இந்தபரப்பிரம்ஹஹஜனையார் ஸாதாரணமாய்தங்கள் கொள்கைகளைக்குறித்தும், பிறர் கொள்கைகளில் தங்களுக்கு குற்றமாகத்தோற்றிய வைகளைமறுத்தும் கீர்த்தனைகள் பாடிக்கொண்டு வந்ததுமன்றி தெருக்களில் மத்தியரங்கமான சிலஇடங்களில் நின்று அ

ந்தஹஜனையின்பிரேரேபகராகிய நாயகராவர்கள், பிரம்ஹஸமாஜவேத ஸமாஜங்களைமுக்கியமாய் ஷை இராமானுஜ பக்தர்கள் புறங்கூறலால் பலவாறுகசெய்த தூஷணைகள் நீங்க, கேட்போர்மனதிற்பதியும்படி சிலபிரசங்கங்களுஞ்செய்தார். இதைக்கேட்டு இராமானுஜபக்தர்கள் மிகுதியுங் கோபாவேசங்கொண்டவர்களாய், தாங்களாயத்தம்செய்து வைக்கிறவர்களிடத்தில்வந்து ரூபில் இவ்விஷயத்தை வாதிக்கவேணுமென்று ஷை நாயகரிடஞ்சொல்லி யனுப்பினர். அவர் "சேஷங்கோபேனபூரயேத்" என்று நம்மவர்க்குள்வழங்கிவருகிற வாக்கியத்தைக்கருதி இதற்கு ஸம்மதிக்காதவராய்தான் லிகிதமூலமாகவாதிக்க உடன்படுவேனென்றார். அதற்கு இராமானுஜ தாசர் ஒருபதிலுஞ் சொன்னாரில்லை.

இப்படியிருக்க இப்போதந்த பிராந்தியத்தில் இராமலிங்கப்பரதேசியென்றும் இராமலிங்கசுவாமியென்றும் நாமத்துவயத்தினால் வழங்கப்பட்டுவருகிற கருங்குழி இராமலிங்கபிள்ளையவர்கள் ஷை இராமானுஜவடியார் வேண்டுதல்பற்றியோ அல்லது வேறுயாருடைய தூண்டுதல்பற்றியோ அல்லது வேறெந்த காரணத்தினாலோ ஏவப்பட்டவராய் இவ்விஷயமாக ஷை நாயகருடன் வாதித்து எவ்வகையிலாவது ஜயம்பெறவேண்டுமென்று தன்னுடைய எண்ணிறந்த சிஷ்ய கோடிகளுடன் மிகுந்த ஆடம்பரமாய் ஜனவரிமீ கசுஉ சாயந்திரம் அவ்விடத்தில் உஉண்ணாமலைசெட்டிசாவடி என்னும் இடத்திற்கு அதிஸமீபமான தக்ஷிணபினாகினி தீரத்தில்விஜயஞ்செய்தார். அதுவிக்கிரகாராதனைகாரருக்கு பெண்ணையாற்று உச்சவமென்று சொல்லுகிற ஒரு விசேஷதினமானதால் அதைச்சேர்ந்த கூட்டமும் அவிடத்திலிருந்தது. இப்படி இவர் வாதம்செய்ய யத்தனித்திருப்பதை ஷை நாயகருக்குத்தெரிவிக்காமலே அவருக்கு அறிமுகமான ஒருவர், தானவரை வெகுநாளாய் பார்க்க நேரிடாமற்போனதை வியாஜமாகக்கொண்டு, அநேகஜனங்கள்வருகிற அந்ததினத்தில் தன்னை அவிடத்தில்வந்து பார்த்தால் மிக நன்மையாயிருக்குமென அதற்கு முந்தினதினத்திலேயே அவருக்கு கபடமாய் கடிதமெழுதி அவரப்படியேசெய்கிறதாய் ஒப்புக்கொண்டபடியே அவரும்வந்துசேர்ந்தார். உடனே அங்கு வாதம்செய்கிறதற்காக எழுந்தருளியிருந்த திருக்கூட்டமானது அவரிடத்தில் வாய்சண்டைசெய்ய ஆரம்பித்தது. இதை ஷை நாயகர் லக்ஷியஞ்செய்யாதவராய் அவ்விடத்திற்கு தன்னைவரும்படி பிரார்த்தித்தவரை வரவழைத்தகாரியமென்னவென்றுவினவ' அவர்இராமலிங்கபிள்ளையுடன்வாதிக்கிறதற்குதானென்றுசொன்னதின்பேரில்இதைவன் வியக்தமாகஎழுதியனுப்பவில்லையென்றுகேட்க அவர் புன்சிரிப்புடனிருந்துவிட்டார். தக்ஷணமே ஷை நாயகர் அந்தகோஷ்டியைப்பார்த்துசொன்னதாவது. "ஸோதரர்களே! அடியேனிவிடத்திற்குவந்தது உங்களிடத்தில் வாதிக்கிறதற்கன்று. ஆயினும் வாதத்தின் உண்மையான உத்தேசியம் விஷயபரிசீலனையாகையால் அதில் நாம் பிரவர்த்திப்பதில் பிரத்தியவாயமொன்றுமில்லை. வாதம் லிகிதமூலமானதெனவும், வாய்மொழிமூலமானதெனவும்இருவகைத்து. அதில் பின்னையதை அனுஷ்டிப்பதால் நம்மவர்க்குள் பெரும்பாலும் விசேஷ வைஷம்மிய முண்டாகிறதேயன்றி அதின் உத்தேசியம் நிறைவேறுகிறதில்லை. மேலும் அப்படிப்பட்ட வாதங்களின்சுவரூபங்களைப்பரிசீலிக்க, அது நடக்கிறபோது அருகிலிருக்கிற சிலருக்கு அனுகூலிப்பதும் துஸ்ஸாத்தியமாயிருக்கும். முன்னையதையவலம்பிக்கின், எக்காலத்தோருக்கும் என்னாட்டோருக்கும் இவ்வபிப்பிராயபேதங்களின் ஹிதாஹிதங்களை குறைவறதகுந்தஸாவகாசத்துடன்பரிசீலித்து, அதின்பேரில் தங்கள்கருத்துகளைவெளியிடவும், இப்படிவாதிப்பதால்தேறிய ஸத்தியமானமார்கத்தைப்பற்றவும்ஹேதுஉண்டாகும். இதைக்கருதியேஅடியேனைவாதத்துக்கழைத்த இராமானுஜபக்தர்களுக்கும் இதேவிடைசொல்லியனுப்பியதுமன்றி பஹிரங்கமாய் அடியேன் பிரசங்கிக்கும்போதும் இதேகருத்தைவெளியிட்டிருக்கிறேன். நீங்களும் அப்படிசெய்வீர்களாயின் எனக்கு சம்மதமே" என்று இதைக்குறித்து இன்னும்பலவாறுக விசேஷமாய் பிரஸ்தாபித்தார்.

இதற்கு இராமலிங்கப்பிள்ளையவர்கள் ஸம்மதிக்காதவராய், இப்போதே வாதித்தாகவேண்டுமென்றுசொன்னார். அதற்குஷைநாயகர் "அப்படியாயின், எங்கள்கொள்கைகளில் உங்களுக்கு குற்றமாகத்தோன்றுமவைகளை பூர்வபக்ஷஞ்செய்து, நீங்களிவ்விடத்தில் பிரசங்கியுங்கள். அதின்விஷயமாக எங்களுக்குள்ள ஆதாரங்களை ஸாவகாசமாய் உங்களையும் அழைத்து வைத்துக்கொண்டு, பயிரங்கமான இடத்தில் நாங்கள் வெளியிடுகிறோம். விவேகிகள் இவ்விருபக்ஷங்களுக்குள்ள நியாயங்களையுங் கேட்டு, நிஷ்பக்ஷபாதமாயாலோசித்து, அவர்களுக்குயுக்தமானவாறு நடக்கலாம்" என்றுசொல்லி, ஸ்வபக்ஷத்தை அடியில்வருமாறுசுருக்கமாகவெளியிட்டார்.

"௧—நித்திய நிர்மல நிரஞ்சன நிராமய நிராலம்பஸ்வரூபியும், ஸர்வஶக்தனும், ஸர்வாந்தரியாமியும், அவாங்மானசகோசரனும, அகிலகல்யாணகுணநிதியுமான கடவுள் ஒருவருளர்.

௨—அவ்வொருவரையே, தியானமார்க்கத்தினாலும், தருமம், ஸத்தியம், தயை, இத்தியாதிகளுக்குரிய ஸத்கர்மானுஷ்டானங்களாலும்வழிபட்டு,ஜீவர்கள்உய்யவேண்டும்.

௩—இதற்குப்புறமாகிய விக்கிரஹாராதனை மானிடஸ்துதிமுதலியவை அநனுஷ்டேயங்கள்.

இம்மூன்றுநிபந்தனைகளேபிராம்மஸமாஜ வேதசமாஜங்களின் ஸித்தாந்தச்சுருக்கம்."

இதன்பேரில் இராமலிங்கபிள்ளை மனதிற்கு அகோசரனை மனதினால் எப்படி தியானிக்கலாம் என்று வினவ, ஷை நாயகர், கேவலம் பரிமிதவஸ்துவைப்போல் மிதக்கியானமுள்ளநம்முடையமனதிற்குஅடங்கான்என்றுசொன்னதேதவிர, ஏகதேசமும்மனதிற்கு விளங்கத்தகாதவன்எனச் சொன்னதன்று" என்று விடைதந்தார். அதற்கு சைவசமயியாகிய மேற்படிபிள்ளை "ஒருஇந்திரியத்திற்கு விஷயமானது வேறொரு இந்திரியத்திற்கும் விஷயமாகும். மனதினால்தியானிக்கிறவனை கண்ணினாலும் பார்க்கலாம். கண்ணுக்குப்புலப்படாமல் மனதிற்குப்புலப்படுகிறவிஷயமேகிடையாது. ஆனதால் விக்கிராராதனை செய்யவேவேண்டும்" என்னும் கருத்தடங்க காரியகாரண சம்மந்தமில்லாமல் விவிதவிஷயங்களைவெளியிட்டு இதன்மீது இப்போதே கக்ஷி சொல்லவேண்டுமென்று ஷை நாயகனைக்கேட்டார்.

இப்படி வாய்வழக்காட ஷை நாயகருக்கு மனதில்லாதிருந்தும் இப்போதிதை சுருக்கமாயாவது கண்டிக்காவிடின் தான்கொண்டவிஷயத்தை பலர் பழுதாகக்கொள்ள இடமுண்டாகுமெனக்கருதி அதற்கு பிரதிஹதிசொன்னதாவது, "அய்யா பிள்ளையவர்களே! தேவரீர் விக்கிரஹத்தையேபூசிக்கவேண்டுமென்று சொன்னமுடிவானது, ஒரு இந்திரியத்தின்விஷயம் வேறொரு இந்திரியத்திற்கும் புலப்படும் என்னும் வாக்கியத்தை ஆதாரமாகக்கொண்டிருக்கிறது. அதுபொய்யானால் உங்களுடையமுடிவும் பொய்யாகும். அதுபொய்யென்பதற்கு இவிடத்திலிருக்கிற ஜனங்களின் பிரத்தியக்ஷ அனுபவமே சாக்ஷி. காதுக்குப்புலப்படுவது மூக்குக்குப் புலப்படாதாகையால்கருத்துக்குப்புலப்படுவது கண்ணுக்குப் புலப்படுமென்பதசங்கதம்" என்று இதற்கு பலவாறான நியாயங்களையும் விரித்துரைத்தார். இந்தசமயத்தில் அதற்கு சமீபமான திருவயிந்தரபுரத்து வடகலைபிராமணபண்டிதர்கள் சிலர்வந்து அவர்களுக்கு வாதத்தின் முன்பின் தொடர்ச்சிதெரியாதாகையால் இப்போதென்னபிரஸ்தாபம் நடக்கிறதெனக் கேட்டார்கள். அதற்கங்கே இருந்த சிலர் "கருத்துக்கே புலப்படவேண்டியவிஷயம்கண்ணுக்குபுலப்படாது" என்பது ஒருவருடையபக்ஷமும் "அஃது புலப்படும்" என்பது மற்றொருவரது மதமுமாகஇருக்கிறதென்றார்கள். இதன்பேரில் அப்பண்டிதர்கள் தங்களபிப்பிராயம்முன்னையதோடுகலக்கிறதென்றுசொல்லி அதற்குள்ள நியாயங்களை அவர்களும் சொன்னார்கள். இராமலிங்கபிள்ளை இதற்கு சம்மதிக்காதவராய் முன்னயது விக்கிரகாராதனைக்குப்பிரதிகூலபக்ஷமென்றும் பின்னயது அனுகூலமென்றும் பிரகிருதவாதத்திற்கு விஷயம் விக்கிரகாராதனையின் ஹிதாஹிதவிசாரணையென்றும் குறிப்பிட்டார்.

உடனேஅவர்கள்திடுக்கிட்டு தாங்கள்கொண்டகருத்து பிசகென்றும், இராமலிங்கப்பிள்ளைசொல்லுகிறதேசரியென்றும் அதற்கு பிரதியாய் ஷைநாயகர்கூறுவதுசரியல்லவென்றும் சொல்லததொடங்கினார்கள். இதைக்கண்டு ஷை நாயகர் ஷையாருடைய பண்டிதஸ்வரூபத்தையும் அவிடத்தில் இருந்தவர்களில் பெரும்பான்மையோரது புதகஸாஹஸத்தையும், நிஷ்பக்ஷபாதத்தையும், நோக்கி வியந்து உபயபக்ஷத்தார் சொல்லிய நியாயங்களையும், ஒரு புத்தகத்தில் அச்சிட்டு அதனை பிரசுரஞ்செய்வதாயும், அதன்பேரில் பலஇடங்களிலிருக்கிற பண்டிதர்களபிப்பிராயத்தைக் கேட்கவேண்டுமெனவும் தான் இனிஇவிடத்தில் வார்த்தைசொல்லவேசொல்லாதொன்றுமொழிந்ததின்பின்னர், இராமலிங்கபிள்ளையும் அவருடைய அடியாரும் நாயகருடைய சக்ஷி கூர்மையான வஜ்ஜிராயுதத்திற்கொப்பாகிய வாய்வாதத்தில் தோல்வியடைந்ததால்ஒதியம்பிலாறையொத்த லிகிதவாதத்தில் ஜயமடையாதென்றும், எல்லாரும் விக்கிரகாராதனை செய்யவேண்டுமென்றும், பிரமஸமாஜத்தாருக்கும் வேதஸமாஜத்தாருக்கும் தெய்வஸான்னித்தியமில்லையென்றும் தங்களுக்கிருப்பதற்குதிருஷ்டாந்தமாக வயிற்றுவலிபோக்குதல் தேள்விஷமிறக்குதல் முதலிய பல அற்புதங்களைச்செய்வார்களெனவும் இன்னும் பலவாறாக ஷைசமாஜங்களைப்பற்றியும், ஷைநாயகனைப்பற்றியும், ஏககூக்குரலாக வியக்திதூஷணம் செய்துகொண்டெழுந்தபோயினர். அவிடத்

திர்பலர் "இராமலிங்கபிள்ளை செம்பைபொன்னுக்குகிறொன்று அவரிடத்தில்அநேகர்சிஷியராகச்சேர்ந்திருக்கின்றனர். இந்தஸமாஜங்களால் அப்படிப்பட்டதுமுடியுமா. இவர்கள்பக்ஷத்திலநியாயமிருந்து என்னசெய்கிறது" என்று பேசிக்கொண்டனர். இதுவிஷயமாய் சீக்கிரத்தில் ஷை நாயகரால் ஒரு சிறுகிரந்தம்பிரசுரஞ்செய்யப்படுமாகையாலும், இக்கடிதம் மிக்பெருகுகின்றமையாலும், இவ்விஷயத்தை இவ்வளவுடன்முடிக்கிறேன்.

ஆ! இந்த பிரஸ்தாபத்தில் சைவஹஜனைக்காருடையஸ்வரூபத்தை சற்றும்விளக்க மறந்தேன். அதை இவிடத்தில் சுருக்கமாயுரைப்பது அனுவசியகமன்று. அதின்தலைவராகிய தந்தி ஆபீஸ் திருவேங்கிடமுதலியார் இராமலிங்கபிள்ளையினது வாதாரம்பகாலத்திலேயேவந்து ஷையாருக்கு ஸாஷ்டாங்கமாய் ஸேவித்துக்கொண்டு உட்கார்ந்து ஷை நாயகருடையபக்ஷம் பழுதுள்ளதென்றுகுறிப்பிக்க "சாஸ்திரம்பொய்யானால் கிரஹணத்தைப்பாரு சுவாமிபொய்யானால் சாணியைப்பாரு" என்னும் வாக்கியத்தை சொல்லிமுடித்தார். இதைக்கொண்டே விவேகிகள் இந்த பஜனை யாருடையபருவத்தைஅறிந்துகொள்வார்களல்லவா?

இதுவுமன்றி ஷை நாயகருடைய வீட்டின் முன்பக்கத்திய கட்டடமானது வாஸ்வஹஸவஜனைமண்டபமாகத்திருத்தப்பட்டு பிரதிசனிக்கிழமை மாலை சுமார் சூ - மணிமுதல் (கூ) மணிவரையில் பகிரங்கமாய் பஜனை நடக்கிறது. இந்த பரப்பிரம்ஹபஜனை ஆரம்பித்ததுமுதல் ஜனங்கள் எங்கும் தத்வவிசாரம்செய்கிறார்கள். இது ஏறக்குறைய க0-கஉ வருஷங்களுக்குமுன் சுமார்அவருக்குகரு-வயதுகாலத்திலேயே குடும்பத்தில் ஆரம்பித்த மார்க்கம் இவ்வளவு காலத்திற்குபிற்பாடு அநுபிரகிருததசைக்குவந்திருக்கிறதைப்பார்க்கையி வருடைய அருளால் நல்லமுடிவுபெறுமெனத்தோன்றுகிறது.

இங்ஙனம்,
இந்துதேசாபிவிருத்தியைக்கோருகிற
ஓர்ஹிந்து.

ஆஅசூஎ - ௵ ஜனவரி௴ களஉ
கூடலூர் பிராந்தியம்.

---

## பெங்களூர், வேதஸமாஜம்.

சத்தியமேவஜயதே நாந்ருதம்.

மெய்யேவெல்லும் பொய்யல்லவெனும்.

தத்துவபோதினிக் கர்த்தரவர்களுக்கு விண்ணப்பம்.

ஐயா. பெங்களூர் வேதசமாஜ பஜனை சபை. ஆதிவாரங்கள்தோறும் சேர்வதாக முன்கடிதத்தில் தெரிவித்திருந்தேனல்லவோ? அவ்வாரம் நீக்கி சனிவாரந்தோறும் இராத்திரி (சா) மணிமுதல் சேர்ந்து (கூ) மணிவரையில். பஜனையும் பிரசங்கமும் தோத்திரமுஞ்செய்கிறார்கள்.

இவ்விதம் நாளது பிப்பிரவரி௴ உஉ சனிவாரம்முதல்நடக்கிறது. ஆதியில் ரு-சா - பேருக்குள்ளாகவிருந்த இந்தசபையானது இப்போது (ரு0) பேருக்கதிகமாவிருப்பதைக் குறித்து கடவுளுக்கு வந்தனஞ் செய்யக்கடோவோமாக.

இந்தசபையைச் சேர்ந்தவர்களிலொருவர் செய்த ஓர்சிறிய உபந்நியாசத்தை தங்கள்பத்திரிக்கைக்கு அனுப்பும்படி சபையார் உத்தரவுசெய்தபடி அனுப்பியிருக்கிறேன்.

அவ்வுபந்நியாசம்.

அன்புள்ள சகோதரரே.

அடியில்வருஞ் சிலசங்கதிகளைச் சொல்ல ஆவல்கொண்டு கேட்டுக் கொள்கிறேன். அதாவது.

சிலகாலங்கட்குமுன்னேயிந்த தென்திசைக்குவந்தபிராமணாள்கல்வியைவிட்டுகலவியில் காலங்கழித்தநமது ஆசார்களை அடுத்து தாங்கள் மாத்திரம்எப்போதும்பெருமையுடனிருக்கும்பொருட்டு வேதம்பிராமணன் படிக்கலாம்மற்றவருக்குச்சொல்லலாமென்றும். க்ஷத்திரியர் படிக்கலாமென்றும் வைசியர்கேட்கலாமென்றும், சூத்திரர்கேட்கவுங்கூடாதென்றும் கேட்டால் அவர்கள்காதில் ஈயங்காய்ச்சிஊற்றவேண்டுமென்றும், சிலபுத்தகங்களிலெழுதி கட்டுப்பாடுசெய்துவிட்டபடியால் அக்காலந்தொட்டுவேதவாக்கியங்களின்படி பரப்பிரமமாகியகடவுளை தியானிப்பதைவிட்டுகட்டுக்கதைகளாகிய புராணங்களையும்பந்தமாகியபிரபந்தமுதலானவைகளையும் வேதமென்று கேட்டும்படித்தும்பதுமையாகியவிக்கிரகங்களைத்தொழ ஆரம்பி

த்தார்கள். அந்தவிஷம்நாளாவட்டத்தில்மற்றவர்கள்மனதிலும்ஏறியதால் ஒருவருக்கொருவர் வெறிகொண்டு விரோதமேலிட்டு வீண்சண்டைசெய்து விவேகமிழந்து போவதை அறியாதவர் வெகுசிலர்.

அந்தவிஷம் இறங்க அறிவாளிகளாகிய பிரமவேதசமாஜத்தார் நமது தேசத்தோர்மீது அன்புகூர்ந்து தங்கள் பொருளையுங் காலத்தையும் உபகாரமாகச்செலவிட்டு பரப்பிரம்ஹதியானமாகிய அமுர்தத்தை, தத்துவபோதினிமுதலியபாலடையின் மூலமாகஊட்டுவதை சிலர்உண்டுகொண்டிருக்கிறார்கள்சிலர்உண்ணலாமென்றுஎதிர்பார்க்கிறார்கள். சிலர்உண்ணக்கூடாதென்கிற பிடிவாதத்திலிருக்கிறார்கள்.

இப்படி சிலர்பிடிவாதமாயிருப்பதற்குக்காரணம், வேதங்கேட்டால் மேற்சொல்லியபடி ஈயங்காய்ச்சி காதில்விட்டுக்கொல்லுவார்களென்கிறபடியினாலோ. அல்லது வேதவாக்கியமாகிய அமுர்தம் இவரகத்திலேறினால் விஷமாகிய விக்கிரகாராதனை விலகிப்போமென்கிறகருத்தறியாமையாலோ அல்லதுதத்காலம், கல்விபிற்சிறப்புற்றோங்கும் கருணையுள்ளபிராமணர் முதலான வர்களுடைய சற்குணங்களைத் தெரிந்துக்கொள்ளாத குறைதானோ. இவைகளை அவர்கள் ஆலோசனைக்கு விட்டுவிடுவதேஉத்தம மென்று இவ்வளவில்நிறுத்தினேன்.

இதன்றியில், சிலகனவான்கள் பிரம்மவேதஸமாஜத்தார் அனுசரிப்பதுஞானமார்க்கமல்லவா ? அவர்கள்யாவரையும் சமமாகக்கொள்ள வேண்டுமல்லவாவென்று தப்பெண்ணத் துடன் கேட்கிறார்கள் ?

அப்பேர்ப்பட்டவர்களும் மற்றவர்களும் அறிந்துய்யும்பொருட்டு சிலதிருஷ்டாந்தம்சொல்லுவதுஉத்தமமாகையால்சொல்லுகிறேன்.

ஞானவான், என்பது, அறிவுள்ளவன் என்பதேயாம். அவர்கள்குணம், தன்னிடத்தில் இஷ்டமுள்ளவர்களுக்காவது விரோதமுள்ளவர்களுக்காவது மேற்காட்டிய இரண்டு மில்லாதவர்களுக்காவது யாதொரு துன்பமுதலானவைகள் நேரிட்டதுபோல் அவர்களைசமமாகநினைத்து அதற்கு வேண்டியதைசெய்யுமென்றும் இந்தக்குணம் ஞானமில்லாதவர்களிடத்து வேறுகளிருக்குமென்றும் இத்திருஷ்டாந்தங்களைக்கொண்ட மற்றவைகளுக்குந்தெளிவாகத்தெரியுமென்றும் நம்புகிறேனென்பதே.

இங்ஙனம், த மதுரமுத்துபிள்ளை.
பெ - வெ - ச. காரியதரிசி.

---

## இதிஹாஸகல்பனை.

சுகத்தைத்தந்து மரியாதையுடன் இகத்தில் சன்மார்க்கத்தில்பிரவர்த்திக்கச்செய்து பரத்தில்நல்லகதியை அடையச்செய்வதல்லவோ கல்வி.

க. சன்மார்க்கத்தில் நிற்பதற்கு நீதிநூலையும், அதைசரியாகஅனுஷ்டிக்க மேலோருடையதிவ்வியசரித்திரத்தையும், சுகத்துக்குவேண்டிய சாதனங்களாய்த்தெரியவுரைத்திருக்கிறது. பூமிசாஸ்திரம், வானசாஸ்திரம், தாதுவர்க்கதத்துவசாஸ்திரம் யந்திரசாஸ்திரம், சிற்பசாஸ்திரம், பயிர்த்தொழில்சாஸ்திரம், கைத்தொழில்சாஸ்திரம், அர்த்தசாஸ்திரம், வியாபாரசாஸ்திரம், பாகசாஸ்திரம், கானசாஸ்திரம் முதலியவற்றையும் இயன்றவரையில் கற்றறிந்து அவைகளில்பயனைக்கொண்டு உஜ்ஜீவிக்க விரும்புகிறோமோ உஜ்ஜீவிக்கக்கூடுமோ அதைஆராய்ந்து ஐயந்திரிபறக்கற்றுணர்ந்து பரஉபகாரம், தயை, பொறுமை, அடக்கம், வாய்மை இன்சொல், அன்புடைமை முதலிய நற்குணங்களையடைந்து கல்விமானாகவேண்டும். இது இம்மைக்கும் இதனுடன் கடவுள் ஞானம், இம்மைமறுமைக்கும். சுகத்தைதந்து நல்லகதி யடைவிக்குமேயன்றி வேறொன்றின்றென்பது எல்லோருக்குந் தெரிந்தவிஷயமே.

உ. இவைகளையும்விட்டு "சித்திரம்பேசேல" என்றஔவைகூறிய நீதிவாக்கியத்தையும்மறந்து, வேடிக்கைக்கட்டுக்கதைகளுக்கும்பொய்க்கதைகளும் தூர்நடத்தை சரித்திரமும், அநேகபிரபந்தங்களில் சேர்த்து அதை கல்வியென்றுசொல்வது கூடுமா ?

(தொடர்ச்சி.)

(நேரிசைவெண்பா.)

சிருஸ்டிதிதி ஸம்ஹாரா ! திவ்வியவேசா !
தெருட்சியுறு மூவா ! தேவா ! மருட்சி
அரணமுறவாம லடியோரை யாளத்
தருணமிது தற்காத்தருள்.

இராகம். கலியாணி. ரூபகதாளம்.

பல்லவி.

தருணமிதேயுமதடியார்க்கருள்புரிவாய் - ஏகபரம
புருஷனேகதிவேறிலையறிவாய்.

சரணங்கள்.

க. வருணமரணமிலாததேவனே,
வாழ்த்துந்திரிதொழில்வல்லநாயனே,
கருணைவிரிதிருளங்களப்பனே,
சத்தாகலியாணகுணமாபுஞ்சனே.........(தரு.)

உ. வாக்குமனமாகிக கெட்டாமாயனே,
வரனுதிசுரரறியாரூபனே,
பாக்கியசதுர்மறைகூவு மீசனே,
படிதிரிநிறையாதி மூலனே....... .........(தரு.)

௩. பொய்புங்களவொடு சூதும்விரிசெரு,
பொருந்தாவிபசாரஞ்செய்த * திரியுரு
மெய்யாகொடுபவமறுக்காவருவுரு
மேனுமில்லாமல்வாழநற்றிரு...............(தரு.)

௪. கல்லுமரமானவர்ச்சைதுதிகதி,
காசும்பெறுதெனமதிதகமாமதி.
அல்லும்பகலுமே யொழியாபுரிவிதி,
அறியாபேதையர் உய்யவருள்நிதி...........(தரு.)

ரு. சருவச்கியானமுமக்கில்லை யெனசொல்ல,
சகத்தில்பவமற † வந்தானெனும்புல்ல,
நெருக்கிவிடாமலேநீயேகதியொல்ல,
நேரமெல்லாம் பேரக்கபுரிவாய்மிகுநல்ல...(தரு)

௬. கங்கையமுனைகோதாவரி-பலநதி
கரையகலாதுமதுதியேவெகுதிதி,
எங்குஞ்சொல்லசிங்கப்பூரான்றமிழ்மதி,
ஏதுபுகலுவோம்நீயேயெமவதி..............(தரு)

இஃது சிங்கப்பூர் சித்திரகவி - வெ - நாராயணசாமிநாயகர் பாடியது.

---

தனியான, ஒப்பற்ற, மெய்யறிவாநந்த பிரமம், சாந்திபூர்ணம், அமிருதம், அதுஉருவும்குற்றமுமற்றது. இதையறிந்தவர் அமிருதராவார்; மற்றவர் துக்கமேயடைவார்.
மெய்யேவெல்லும், பொய்யல்ல.

---

சென்னப்பட்டணம்,—தத்துவபோதினி அச்சுக்கூடத்தில், கா. தெய்வசிகாமணி முதலியாரால், பதிப்பிக்கப்பட்டது.

---

* மும்மூர்த்தி. † ஏசுக்கிறிஸ்து.